17-7-1991
2 பகுதி

# மணலாறு மோதலில் 14 இராணுவம் பலி;

## 12 புலிகள் வீரமரணம்

[மணலாறு]
மணலாறு காட்டுப்பகுதியில் விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையில் கடந்த இருநாட்களாக இடம்பெற்ற கடும் மோதலில் 14 இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் 23 பேர் படுகாயமடைந்தனர்.
(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 4-50

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆடி 1 இதழ்: 156
யாழ்ப்பாணம் புதன்கிழமை 17-7-1991

## ஆனையிறவு முகாமை மீட்க "ஒபரேசன் பலவேகம"

(கொழும்பு)
விடுதலைப் புலிகளின் முற்றுகையிலிருந்தும், தாக்குதலிலிருந்தும் ஆனையிறவு முகாமை மீட்கும் முயற்சியில் கட்டைக்காட்டில் தரையிறங்கிய படைப்பிரிவின் தாக்குதல் நடவடிக்கைக்கு 'ஒபரேசன் பலவேகம' என பாதுகாப்புப்
(4ம் பக்கம் பார்க்க)

## வடமராட்சி கிழக்கில் 15 பேரை காணவில்லை

[புலோலி)
யுத்தம் நடந்துகொண்டிருக் வடமராட்சி கிழக்குப் பகுதியில் சுமார் 15 பேரைக் காணவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.
கட்டைக்காடு - வெற்றிலைக்
(4ம் பக்கம் பார்க்க)

### ஆனையிறவு நோக்கி

# முன்னேறும் இராணுவ முயற்சி விடுதலைப்புலிகளால் முறியடிப்பு!

(யாழ்ப்பாணம்)
**வெற்றிலைக்கேணி ஊரியான் பகுதி ஊடாக நேற்றுக் காலை விமானங்களின் உதவியுடன் ஆனையிறவு நோக்கி முன்னேற முயன்ற படையினரின் முயற்சி விடுதலைப்புலிகளால் முறியடிக்கப்பட்டது.**

நேற்றுக்காலை 9-00 மணியளவில் இரு ஹெலிகொப்டர்கள், குண்டு வீச்சு விமானங்கள், வை-12 ரக விமானம் உட்பட கடலிலிருந்து பீரங்கித் தாக்குதல் நடத்தியவாறு ஆனையிறவு பகுதியை நோக்கி முன்னேற முயன்ற படையினரை ஒரு அங்குலம்கூட நகர விடாது புலிகள் கடுமையான தாக்குலை நடத்தினர்கள்.
புலிகளின் தொடர்ச்சியான தாக்குதலையடுத்து படையினர் தமது முயற்சியைக் கைவிட்டு நேற்று முன்தினம்
(4ம்பக்கம் பார்க்க)

## போராட்டத்தில் மக்களும் இறங்கவேண்டும்

(யாழ்ப்ப ணம்)
''வெற்றியை மட்டும் போற்றிக்கொண்டு இருக்காமல் மக்களும் போராட்டத்தில் இறங்கினாலே மேலும் விடுதலைப்புலிகள் வெற்றியடைவர்'' என்று விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி செயலாளர் நாயகம் யோகி யோகரத்தினம் தெரிவித்தார்.
புலிகளின் குரல் வானொலி
[4-ம் பக்கம் பார்க்க]

## ஹெலியிலிருந்து கிரனேட் வீச்சு
## சிறுமி பலி; 13 பேர் காயம்

[புலோலி]
மணல்காடு பகுதியில் நேற்றுப் பிற்பகல் மூன்றரை மணியளவில் ஹெலிகொப்டர் ஒன்று கிரனேட் வீசியதில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்களில் அமலஜினி [4 வயது] என்ற சிறுமி மரணமானார். மூன்று நடுத்தர வயதினரும், பத்து சிறுவர்களும் பலத்த காயமடைந்தனர்.
யுத்தம் நடைபெற்று வரும்
(4ம் பக்கம் பார்க்க]

## இரவில் பதுங்கு குழிக்குள் தஞ்சமடையும் மக்கள்

(சாவகச்சேரி)
தென்மராட்சிப் பகுதியை நோக்கி கடந்த சிலநாட்களாக பலாலி இராணுவ முகாமிலிருந்து நடத்தப்பட்டுவரும் ஷெல் தாக்குதல்களினால் இப்பகுதி மக்கள் தமது இரவுப் பொழுதினை பதுங்கு குழிக்குள் கழிக்கின்றனர்.
கடந்த சில நாட்களாக நள்ளிரவு நேரத்தில் இப்பகுதியை நோக்கி நடத்தப்படும் ஷெல்
(4ம் பக்கம் பார்க்க)

## காப்பரண்கள் அமைக்க உதவுமாறு வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)
ஆனையிறவுப் பகுதியில் ஸ்ரீ லங்கா இராணுவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான போர் விரிவடைந்து செல்கின்றது.
இந்நிலையில் யுத்தத்தைத் தொடர்வதற்கு ஏற்ற முறையில் காப்பரண்கள் அமைக்கப்பட வேண்டியது அவுசியமாகும்.
(4ம் பக்கம் பார்க்க)

## தென்மராட்சி நோக்கி 2வது நாளாக ஷெல் தாக்கு

(யாழ்ப்பாணம்)
தென்மராட்சிப் பகுதியை நோக்கி இரண்டாவது நாளாக நேற்றுமுன்தினமிரவு பலாலியிலிருந்து ஆட்லறி
[4-ம் பக்கம் பார்க்க]

## நாற்பது படையினர் பலி!

(கொழும்பு)
ஆனையிறவுப்பகுதியில் கடந்த ஏழு நாட்களாக நடந்த போரில் முகாமுக்குள் மட்டும் 24 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்
(4-ம் பக்கம் பார்க்க)

## போக்குவரத்து செய்வதினை குறைக்குமாறு வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)
பிரதான வீதிகளில் மக்கள் தமது போக்குவரத்தினை குறைத்துக் கொள்ளவேண்டும் இழப்புக்களைத் தவிர்ப்பதற்கு பிரதான வீதிகளில் போக்குவரத்துச் செய்வதனைக் தவிர்த்துகவுமாறு தமிழீழ காவல் துறையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.
தமிழீழ தாயகத்தை மீட்பதற்காக எதிரியுடன் புலிகள் மோதிக்கொண்டிருக்கும் இவ்வேளையில் காயமடைந்த போராளிகளைக் காப்பாற்றுவதற்கு கண்டி வீதி, ஆஸ்பத்திரி வீதிகளில் பொதுமக்கள்
(4-ம் பக்கம் பார்க்க)

### ஊரடங்கு சட்டத்தினால்

## பொருள்களை இறக்காமல் இரு கப்பல்கள் திரும்பின

(யாழ்ப்பாணம்)
கடந்த ஐந்து நாட்களாக காங்கேசன்துறையில் தரித்து நின்ற இரண்டு உணவுக் கப்பல்கள் ஊரடங்குச் சட்டத்தினால் பொருள்களை இறக்காமல் திருகோணமலை துறைமுகத்திற்கு நேற்றுமுன்தினம் சென்றுள்ளன.
[4ம் பக்கம் பார்க்க]

## 3 கோடி ரூபா பிரிட்டிஷ் உதவி

(கொழும்பு)
இலங்கையில் இடம்பெயர்ந்த அகதிகளுக்கு உதவுவதற்கென பிரிட்டிஷ் அரசு 3 கோடியே 30 லட்சம் ரூபாவை வழங்கியுள்ளது.
மனிதாபிமான ரீதியில் இவ்வுதவி வழங்கப்படுவதாக பிரிட்டிஷ் அரசு அறிவித்துள்ளது.
இவ்வுதவி இலங்கையில் கடமையாற்றும் ஐக்கிய நாட்டு அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயத்திடம் வழங்கப்பட்டுள்ளது. (பூ)

## தமிழக அரசு எச்சரிக்கை; ஈழ அகதிகள் உதாசீனம்!

[சென்னை]
தமிழகத்திலுள்ள இலங்கை அகதிகளைப் பதிவு செய்யுமாறு தமிழக அரசு விடுத்த வேண்டுகோளை பெரும்பலான அகதிகள் உதாசீனம் செய்துள்ளதாக தெரியவருகிறது.
நாளை மறுதினம் 19-ம் திகதிக்குள் இலங்கை அகதிகள் தம்மைப் பதிவு செய்யுமாறு கேட்கப்பட்டபோதும்
(4-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## "மீரா நாவல்கள்"

பரிசளிக்கக்கூடியவை, சிறுவர்களுக்கு 'இராவணன் கோட்டை', இன விடுதலையை மையமாக 'சங்கரன்', 'அக்கினி', 'முள் முடி மன்னர்கள்' இன்னும் நெஞ்சைத் தொடும் பத்து நாவல்களும் விற்பனையாகின்றன.
(சி 4988)

## பாலாஜி புத்தகசாலை

புத்தகம், கொப்பி கட்டுவதற்கு ஆர்வமுள்ள பெண் பிள்ளைகள் தேவை. 15/6, முதலாம் ஒழுங்கை, மின்சார நிலயவீதி, யாழ்ப்பாணம்.
எ-1440

## வியாழமாற்றம்

வருடம் முழுவதற்கும் 12 இராசிக்கும் தனித்தனியான பலன்களுடன் விற்பனையாகின்றது. கணித்து வெளியிடுபவர் ஜோஸ்யர். சகல புத்தக சாலைகளிலும் விற்பனையாகின்றது.
எ-1441

## விற்பனைக்கு

பாவித்த சகல மணிக்கூடுகளும் வாங்கப்படும். (உதிரிப் பாகங்களுக்காக) விற்கப்படும் சகல மணிக்கூடுகளும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். டில்கா வாச் வேக்ஸ், 404/1, ஆஸ்பத்திரி வீதி (மேல்மாடி), பஸ் நிலயம் முன்பாக), யாழ்ப்பாணம்.
சி-4996

## FOR SALE

Portable Type writer (Olivetti) Allmostnew) and14 second Hand books Mechanical Engineering on Accontancy, [All English. S. Gunabalasingam, Namagal lane (Off Potpaty Rd) Kokuvil East (C-4995

## புதிய மாணவர்களைப் பதிவுசெய்தல் 1990/91

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

மேற்கூறப்பட்டவிடயம் சம்பந்தமாக அண்மையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தைத் தொடர்ந்து, தற்போழுது உள்ள சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு தபால் மூலமும் புதிய மாணவர்களை பதிவு செய்தல் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதை இத்தால் அறியத் தருகிறோம். பதிவு செய்யும் இறுதித் திகதி 01-08-91 ஆகும். பதிவு செய்யும் பத்திரம் பல்கலைக்கழகமானியஆணைக் குழுவிலும் பெற்றுக் கொள்ளலாம்.

சுயமுகவரியிட்ட முத்திரையொட்டிய கடித உறையும் அனுப்பப்பட வேண்டும்.

பதிவாளர்
எ-1439

## பாடசாலைகள் இயங்கவில்லை

[வட்டுக்கோட்டை]

நாட்டின் நிலைமை காரணமாக வட்டுக்கோட்டை, பண்டத்தரிப்பு, சுழிபுரம், காரை நகர் கொத்தணிகளைச்சேர்ந்த பல பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன.

இடையிடையே சில பாடசாலைகள் இயங்கிவந்தபோதிலும் ஆசிரியர், மாணவர்வரவு மிகக் குறைவாகவே இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.
[139]

## பனம் பொருள் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

பனை அபிவிருத்திச் சபையின் அனுசரணையுடன் நல்லூர் முருகன் சனசமூக நிலையத்தில் பனம் பொருள் கைப்பணிப் பயிற்சி ஆரம்பிக்கப்படவுள்ளது.

அடுத்த மாதம் 2-ம் திகதி தொடக்கம் ஆரம்பிக்கப்படும் இப் பயிற்சி நெறியில் சேர விரும்புவோர் 20ம் திகதி காலை 8-30 மணிக்கு மேற்படி சன சமூக நிலயத்திற்குச் சமுகம் அளிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

## யாழ்ப்பாண மாநகரசபை

## கூறுவிலை அறிவித்தல்

கீழ்க்காணும் அமைப்பு வேலைக்கும் தளபாட விநியோகத்திற்குமான கூறுவிலைகள் எம்மால் கோரப்படுகின்றன.

01. குழாய் கிணறு அமைத்தல்.

02. விரிவுரை மண்டபக் கதிரைகள், வாசிப்பு மேசை, சாதாரண கதிரைகள், இருக்கைகள்.

கூறுவிலைப் படிவங்களை பெற்றுக்கொள்ள வேண்டிய இறுதித் திகதி 29.07.1991 பிற்பகல் 3.00 மணியாகும்.

பூர்த்தி செய்யப்பட்ட கூறுவிலைப்படிவங்களை சமர்ப்பிக்க வேண்டிய இறுதித் திகதி 31.07.1991 நண்பகல் 12.00 மணியாகும்.

மேலதிக விபரங்களையும் கூறுவிலைப் படிவங்களையும் வேலைப்பகுதி பொறியியலாளரிடம் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வே. பொ. பாலசிங்கம்.
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
15.07.1991.
(ஏ 1442)

## மீன்எண்ணை குளிகைகள்

(வட்டுக்கோட்டை)

சித்தன்கேணி கலைநகர்ப்பகுதியில் உள்ள 3-5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு மீன் எண்ணைக் குளிகைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

வட்டுக்கோட்டைப் பிரிவை சேர்ந்த குடும்பநல சேவையாளர் உட்பட சுகாதாரப் பகுதியினர் இந்த மீனெண்ணைக் குளிகைகளை கலைநகர் நேருஜி சனசமூக நிலையத்தில் வைத்து வழங்கி வருகின்றனர்.
(133)

## மண்ணெண்ணை இலவசம்

(வட்டுக்கோட்டை)

சித்தன்கேணி கலைநகர் நேருஜி ஐக்கிய நாணய சங்கத்தினர் தமது உறுப்பினர்கள் பயிர்ச்செய்கையில் ஈடுபடுவதற்காக இலவசமாக மண்ணெண்ணை வழங்கிவருகின்றனர்.

மண்ணெண்ணெய்க்குப் பெரும்தட்டுப்பாடு நிலவிவரும் இவ்வேளையில் இச்சங்கத்தினர் மண்ணெண்ணையை வரவழைத்துத் தமக்கு இலவசமாக வழங்கித் தம்மைப் பயிர்ச்செய்கையில் ஊக்கப்படுத்திவருவது குறித்து அங்கத்தினர்கள் பெரும் பாராட்டுத் தெரிவிக்கின்றனர். [139]

## விசேட கூட்டம்

[ஊர்காவற்றுறை]

ஊர்காவற்றுறை துயர் துடைப்புச் சங்கத்தின் விசேட கூட்டம் ஒன்று எதிர்வரும் 21-ம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை யாழ். புனித. சாள்ஸ் மகாவித்தியாலயத்தில் நடைபெறவிருக்கிறது.

ஊர்காவற்றுறை பங்குத் தந்தை அருட்திரு சா. பி. கிருபானந்தன் உரை நிகழ்த்துவார். அதனைத் தொடர்ந்து விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணிப் பிரமுகர் சிறப்புரை நிகழ்த்துவார். அரை ஆண்டு அறிக்கை நிதி சமர்ப்பிக்கப் பட்டபின் புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்படவிருக்கின்றனர்.
(59)

## அன்பளிப்பு

புலோலி

வடமராட்சி ஊனமுற்றோர் சங்கத்தினல், சர்வோதயத்தினல் அன்பளிப்புச் செய்யப்பட்ட முச்சக்கர வண்டி ஒன்று பொலிகண்டியைச் சேர்ந்த எம். பரராஜசிங்கம் என்பவருக்கு வழங்கப்பட்டது. -61

## முதலாமிடம்

யாழ்ப்பாணம்

1991 தமிழ்த்தினப்போட்டி மாவட்டத் தெரிவில் புங்குடுதீவு மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த செல்வி ந. கிரிசாந்தினி இரண்டாம் பிரிவு உறுப்பெழுத்து நிகழ்ச்சியில் முதலாமிடத்தைப் பெற்றுள்ளார்.

செல்வன் சி. சிவோதயன் பிரிவு இரண்டு ஆக்கம் நிகழ்ச்சியில் முதலாமிடம்பெற்றும் மகாணப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளனர்.

செல்வி வீ. கனகேஸ்வரி பிரிவு மூன்றில் இசை தனி நிகழ்ச்சியில் மூன்ரும் இடத்தைப்பெற்றுள்ளார்.

0 0

[வட்டுக்கோட்டை[

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டப்பாடசாலைகள் மெய்வல்லுநர் போட்டியில் சமபுள்ளிகளைப் பெற்ற அம்பனைக் கொத்தணியும், இளவாலைக் கொத்தணியும் முதலாமிடத்தைப் பெற்றுக்கொண்டன.

இப்போட்டி இம்மாதம் 5-ஆம் திகதி அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் பண்டத்தரிப்பு கல்விக்கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. ப. சண்முகராசா தலைமையில் நடைபெற்றது.

இப்போட்டியில் பண்டத்தரிப்புக் கல்விக்கோட்டப் பிரிவுக்குட்பட்ட சகல கொத்தணிகளும் கலந்துகொண்டன என்பது குறிப்பிடத்தக்கது
(139)

## புனித. யாகப்பர் திருவிழா

(ஊர்காவற்றுறை)

குருநகர் புனித. யாகப்பர் [சந்தியோகுமையோர்) ஆலய வருடாந்த திருவிழா 16-ஆம் திகதி கொடியேற்றத்துடன் பங்குத் தந்தை அருட்திரு பி. எம். இம்மானுவேல் அடிகளார் தலைமையில் ஆரம்பமாகியுள்ளது.

இத்திருவிழா எதிர்வரும் 25ம் திகதி வியாழக்கிழமை நடைபெறும். கூட்டுத் திருப்பலி திருச்சொரூப பவனி ஆகியவற்றுடன் நிறைவுபெறவிருக்கிறது.
(59)

## அவ்ரோ தாக்குதல் இளைஞர் காயம் வீடுகள் சேதம்

(புலோலி)

நாகர்கோவில் பகுதியில் அவ்ரோ விமானம் நடத்திய குண்டுவீச்சில் இளைஞரொருவர் படுகாயமடைந்தார். மூன்று வீடுகள் முற்ருகசேதமடைந்தன.

நாகர்கோவில் வடக்கைச் சேர்ந்த பொ. தேவநேசன் என்பவரே காயமடைந்தவராவார். இவர் மந்திகை அரசினர் ஆதாரவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.
[61]

## புதிய நியமனம்

(பண்டத்தரிப்பு)

மாதகல் தெற்கு கிராம சேவை அலுவலராக திரு. ப. லோ. இ. ஆனந்தராசா இம்மாதம் தொடக்கம் யாழ். மாவட்ட அரசாங்க அதிபரினல் நியமிக்கப்பட்டுள்ளார்.
(72)

## உரம் விநியோகம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு உலர்வலய அபிவிருத்திக்கழகம் உபஉணவு செய்கையில் ஈடுபட்டுள்ள அதன் உறுப்பினர்கள் 42 பேருக்கு இரண்டாவது கட்டமாக உரம் மண்ணெண்ணை ஆகியவற்றை அண்மையில் வழங்கியுள்ளது.
[72]

## கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கொத்தணி அமைப்பினுள் இயங்கும் சகள் பாலர் பாடசாலை ஆசிரியர்கள் நாளை 18ம் திகதி காலை 10-30 மணிக்கு வண்ணைநாவலர்மகா வித்தியாலயத்தில்தவருது சமுகமளிக்குமாறு காரைநகர் கொத்தணி அதிபர் கேட்டுக் கொள்கிருர்.
(மா)

## பிரான்ஸிய நட்புறவுச் சங்கம்

பிரான்சிய நட்புறவுச் சங்கம் 1883ம் ஆண்டு பிரான்ஸின் தலைநகரமான பாரிசில் ஆரம்பிக்கப்பட்டு இன்று உலகத்தில் 103 நாடுகளில் 1200 கிளைகளாக இயங்குகின்றன. இங்கு 350,000 மாணவர்கள் வருடாவருடம் பிரான்ஸ் மொழி கற்பதற்கு சேர்ந்துகொள்கிருர்கள்.

உலகம் முழுவதும் உள்ள வெவ்வேறு இனங்களின் கலாசாரம், மொழி பரிவர்த்தனை செய்துகொள்வதும், பிரான்ஸ் புரட்சியின்மூலம் பிரான்ஸ் மக்கள் அடைந்த சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவத்தை மானிட வர்க்கம் முழுவதும் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதுமே இச்சங்கத்தினுடைய குறிக்கோளாகும்.

இலங்கையில் கொழும்பில் 1954ம் ஆண்டிலும், கண்டியில் 1965ம் ஆண்டிலும், யாழ்ப்பாணத்தில் 1976ம் ஆண்டிலும் இருந்தும் இதன் கிளைகளை இயக்கிவருகின்றன.

ஒவ்வொருவருடமும் 50 மாணவர்களும், தொழில் பயிலுனர்களும் பிரான்ஸிய கல்லூரிகளிலும் தொழிற் பயிற்சி நிறுவனங்களுக்கும் இலங்கையிலிருந்து புலமைப் பரிசில் பெற்று சென்றுவருகிருர்கள்.

— யாழ். பி. ந. சங்கம்

## கூரை பிரித்து திருட்டு

(வட்டுக்கோட்டை)

நள்ளிரவு நேரத்தில் கூரை பிரித்து உட்புகுந்த திருடர் கோஷ்டியினல் பத்தாயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள்சங்கானை பலநோக்குக்கூட்டுறவுச் சங்க 29.வது கிளையில் திருடப்பட்டுள்ளது.

சங்கரத்தை-துணைவிப் பகுதிகளுக்கான ப. நோ. ச. கிளையிலேயே இத்திருட்டு நடைபெற்றுள்ளது.

## புதிய போதகர்

பண்டத்தரிப்பு

பண்டத்தரிப்பு திருச்சபை போதகராக திருமதி ஆர். தம்பியப்பா நியமிக்கப்பட்டுள்ளார். இவர் சுவிஸ்சலாந்து நாட்டில் குருத்துவப் பயிற்சியை முடித்துக்கொண்டு அண்மையில் நாடு திரும்பியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பதவி உயர்வு

(பருத்தித்துறை)

வடமராட்சி கோட்டக் கல்வி அலுவலக பிரதமகல்வி அதிகாரி திரு எஸ். செல்லத்துரை வடக்கு-கிழக்குமாகாண கல்வியமைச்சினல் உதவிக்கல்விப் பணிப்பாளராக பதவி உயர்த்தப்பட்டு வடமராட்சி கோட்டக்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.
[22]

## நிறுவை அளவை உபகரணங்கள் முத்திரையிடல்

(உடுவில்)

உடுவில் பிரதேச அபிவிருத்திச் சபைஉப அலுவலகத்தில் வைத்து இப்பிரிவுக்குட்பட்ட நிறுவை அளவை உபகரணங்களுக்கு முத்திரையிடப்பட்ட போது பல வர்த்தகர்கள் தமது உபகரணங்களைக் கொண்டுவந்து முத்திரையிட்டுச் சென்றனர்.

யாழ்ப்பாண செயலக உள்நாட்டு வர்த்தகப் பிரிவின் நிறுவை அளவை பிரிவினர் முன்னிலையில் முத்திரையிடல் இடம்பெற்றது. -109

## மலிவு விலை விற்பனைநிலையம்

(பருத்தித்துறை)

நெல்லியடியில் ''மலிவு விலை மீன்கருவாடு விற்பனை நிலையம் ஒன்று திறக்கப்பட்டு மலிவு விலையில் மீன் கருவாடு என்பன விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. தமிழீழ ஆய்வு நிறுவனம் வடமராட்சி கடற்றெழிலாளர் சமூகஅபிவிருத்திகளினதும், சங்கங்களினதும் ஒன்றியத்தின் அனுசரணையுடன் இம்மலிவு விலை மீன், கருவாடு விற்பனைநிலையத்தைத் திறந்துள்ளது.
(52)

## மெய்வல்லுனர் போட்டி

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றபோது சேரன் இல்லம் முதலாமிடத்தையும், சோழன் இல்லம் இரண்டாமிடத்தையும், பாண்டியன் இல்லம் மூன்ரும் இடத்தையும் பெற்றன.

கல்லூரி அதிபர் நா, ஜெயநாயகம் தலைமையில் நடை பெற்ற இப்போட்டியில் பண்டத்தரிப்பு கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. ப. சண்முகராசா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களை வழங்கினர்,
(72)

# “அனுராதபுரம் வரை ——— எதிரிகளை விரட்டியடிக்க வீட்டுக்குஒருவர் வரவேண்டும்’

## — கவிஞர் வாஞ்சிநாதன்

(யாழ்ப்பாணம்)

“ஆங்கிலேயர்எமது மண்ணை ஆக்கிரமிக்க வந்தபோது, கிளர்ந்து எழுந்த வன்தான் வன்னியில் வாழ்ந்த பண்டாரவன்னியன் என்ற தமிழ்மன்னன். சங்கிலியனைப் போன்று இவனும்தமிழர்களின் சுயமரியாதையைக் காப்பதற் காகப் போராடினன். இன்று, இதே வன்னிப் பகுதியில் எதிரிகளின் முகாம்கள் பல வற்றை விடுதலைப்புலிகளாகிய நாம், எமது தலைவர் பிரபாகரனின் தலைமையின்கீழ் நின்று போராடித் தகர்த்தெறிந்துள்ளோம்.

இவ்வாறு அண்மையில் கிளிநொச்சி திருநகர்ஏழாம் வாய்க்காலில் அமைந்திருக்கும் இந்து மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற போர்க்காலக் கருத்தரங்கில் பேசும்போது விடுதலைப் புலிகளின் கவிஞர் மு. வே.யோ.வாஞ்சிநாதன் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசும்போது: “வளமான நெல்விளையும் வயல்களைக் கொண்டுள்ள பூமி இது... இந்த வளமான நாட்டில் வாழும் மக்கள் விடுதலைப் புலிகளின் தளமாக இருக்கிறார்கள் என்பது உண்மைதான்... களம்காணும் புலிகளை இந்த வளமான மக்கள் வளமார வாழ்த்திளுல் மட்டும்போதாது நிலமானம் காக்க தமிழ்க் கானம் கேட்க போராளிகள் தொகை அதிகரிக்கப்பட வேண்டும் வீட்டுக்கு ஒரு போராளி போராட முன்வர வேண்டும். அப்போதுதான் நாம் எதிரியை அனுராதபுரம் வரையும் அடித்து விரட்டமுடியும்.

## பாடசாலை இரு பிரிவுகளையும் இணைக்க கோரிக்கை

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் காலைவேளையில் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி மாணவர்களுக்கும் மாலைவேளையில் காரைநகர்ப் பகுதி மாணவர்களுக்கும் இரு பிரிவாக வகுப்புக்கள் நடாத்தப்பட்டு வருகிறது,

இக்கல்லூரியில் இரு பிரிவாகப் பாடசாலைகள் நடாத்துவதை நிறுத்தி, இரண்டுபிரிவுகளையும் ஒன்றிணைத்து ஒரேபிரிவாக இருநேரப்பாடசாலையாக இயங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் மாணவர்கள் அனைவரும்ஆறுமணித்தியாலங்கள் கல்வி கற்க ஆவனசெய்யுமாறும் வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி அதிபரும் வட்டுக்கோட்டை கொத்தணிப்பிரிவு அதிபருமான திரு. சி. டாஸிடம் பெற்றோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (139)

## பொதுச்சபைக் கூட்டம்

[பருத்தித்துறை]

வடமராட்சி வலதுகுறைந்தோர் சங்க பொதுச்சபைக் கூட்டம் எதிர்வரும் 26ம் திகதி அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக வடமராட்சி வலது குறைந்தோர் சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார். [52]

## மருந்து தட்டுப்பாடு!

[பருத்தித்துறை]

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் மருந்து வகைகளுக்கு பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனல் இங்கு சிகிச்சைபெறும் நோயாளர்கள் பலத்த இன்னல்களை அனுபவித்து வருகின்றனர். நோயாளர்களுக்கு மருந்துகள் இல்லை எனக் கைவிரிக்கும் டாக்டர்கள் மருந்துகளை வெளியே வாங்குமாறு எழுதிக் கொடுக்கின்றனர். இப்பகுதிகளிலுள்ள மருந்துக் கடைகளிலும் பல மருந்து வகைகள் கிடைப்பதில்லை. [52]

## காரைநகர் மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை

[யாழ்ப்பாணம்]

காரைநகர் வாரிவளவு நல்லியக்கச் சபை வழமைபோல் இவ்வருடமும் ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்ற இருக்கும் காரைநகர் மாணவர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் ஓர் முன்னேடிப் போட்டிப் பரீட்சையை இம் மாதம் 28-ம் திகதி ஞாயிற்றுக்கிழமைகாலை 8-00மணிக்கு நடாத்தவுள்ளது.

இப்பரீட்சை வண். நாவலர் ம. வி.[யாழ்ப்பாணம்),வட்டு. இந்துக்கல்லூரி(சித்தன்கேணி) விக்டோரியாக் கல்லூரி (சுளிபுரம்) ஆகிய பாடசாலைகளில் நடைபெறும்.

முதல் ஐந்து மாணவர்களுக்கும் பரிசில் பணம் கிராமிய வங்கியில் வைப்பிலிட்டு வழங்கப்படும்.

மேலும் ஆண்டு 5 அரசாங்க புலமைப் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களும் பரிசில்கள் வழங்கி பாராட்டப் படுவார்கள் என்றும் சபை செயலர் திரு ச.பத்மநாதன் தெரிவித்துள்ளார். -சி

## அன்னை பூபதி நினைவு போட்டி முடிவுகள்

[யாழ்ப்பாணம்]

விடுதலைப் புலிகளின் மாணவர் இயக்கம் கடந்த ஏப்ரல் மாதம் நடாத்திய அன்னை பூபதி நினைவுப் பொது அறிவுப் போட்டியில் கொத்தணி ரீதியாக மேற்பிரிவு, கீழ்ப்பிரிவில் பரிசு பெற்றோர் விபரம்:

### யாழ். மாவட்டம்

பண்டத்தரிப்பு: த. முகுந்தன், பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி, கீழ்ப்பிரிவு. சி.அருள்காந்தன், பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி, மேற்பிரிவு.

வட்டுக்கோட்டை: இ. ஜெயப்பிரியா வட்டு. இந்துக் கல்லூரி, கீழ்ப்பிரிவு. சி. பூமகள், வட்டு. இந்துக்கல்லூரி, மேற்பிரிவு.

காரைநகர்: சொ. மனஞ்சயன், யாழ்ரன் கல்லூரி, மேற்பிரிவு.

வல்வெட்டித்துறை: க.சுதர்சினி, வல்வை மகளிர் வித்தியாலயம், கீழ்ப்பிரிவு. இ. காயத்திரிதேவி, வல்வை மகளிர்வித்தியாலயம், மேற்பிரிவு.

சாவகச்சேரி நகர்: செ. சுஜித்தா, சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, கீழ்ப்பிரிவு. சி. ஜெயப்பிரகாசினி, சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, மேற்பிரிவு.

சாவகச்சேரி வடநகர்: க. றேணுகாவதி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, கீழ்ப்பிரிவு. ந. மஞ்சுளா, சாவகச்சேரி இந்துக்கல்லூரி, மேற்பிரிவு.

மட்டுவில்; க. அமுதா,மட்டுவில் வடக்கு கமலாசினி வித்தியாலயம், கீழ்ப்பிரிவு. ச. சுரேந்திரன், மட்டுவில் மகா வித்தியாலயம், மேற்பிரிவு.

கைதடி: க. கமலக்கண்ணன், நாவற்குழி மகாவித்தியாலயம், கீழ்ப்பிரிவு. சி. றூபினி, கைதடி முத்துக்குமாரசாமி ம. வி. மேற்பிரிவு.

கொடிகாமம்: ச. கேதீஸ்வரி, கச்சாய் அ. த. க. பாடசாலை, கீழ்ப்பிரிவு. சி. கலையரசி, கொடிகாமம் திருநாவுக்கரசு ம. வி மேற்பிரிவு.

உசன்: சி. அஜந்தன், உசன் இராமநாதன் ம. வி, கீழ்ப்பிரிவு. வி. சிவரஞ்சினி, உசன் இராமநாதன் ம. வி, மேற்பிரிவு.

வரணி: வ. விமாலினி, வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தி, கீழ்ப்பிரிவு. வே. சிவராசா வரணி மகா வித்தியாலயம், மேற்பிரிவு.

பளை; கிளி/முகாவில் அ. த. க. பாடசாலை, கீழ்ப்பிரிவு சி. சு. சுரேந்திரஜித், பளை மகா வித்தியாலயம், மேற்பிரிவு.

[தொடரும்]

## பதில் கடமை

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பங்குத்தந்தை அருட்திரு சாமிநாதர் பிரான்சிஸ் கிருபானந்தன் அடிகள் தற்பொழுது யாழ். பரிசுத்த அடைக்கலநாயகி ஆலயப்பங்கில் பங்குத்தந்தையாக பதில் கடமைபுரிந்துவருகின்றார். (59)

## சிறுவன் காயம்

(யாழ்ப்பாணம்)

துப்பாக்கிப் பிரயோகத்திற்கு இலக்காகிய ஒருசிறுவன் யாழ். போதனவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வவுனியா கல்மடுவை சேர்ந்த பாலசுப்பிரமணியம் பாக்கியராசா (11-வயது) என்பவரே வீட்டில் நின்றபோது தூரஇடத்திலிருந்து வந்த துப்பாக்கிச்சூட்டிற்கு இலக்காகியவராவார். [56]

## தீவுப்பகுதி 'வழமைக்கு திரும்பியுள்ளது

(யாழ்ப்பாணம்)

தீவுப்பகுதியில் அனைத்துபல நோக்குக்கூட்டுறவுச் சங்கங்களும் மற்றும் அங்கு இயங்கிய திணைக்களங்கள்யாவும் இப்பொழுது அப்பகுதியிலேயே இயங்கத் தொடங்கியுள்ளன.

இதுவரை யாழ்ப்பாணத்தில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் கொடுத்து வந்த உலர் உணவு விநியோகங்கள் இனிமேல் வேலணை, புங்குடுதீவு ஆகியவற்றிலும், ஊர்காவற்றுறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் உலர்உணவு விநியோகங்கள் மண்கும்பானிலும் விநியோகிக்கப்படும்.

ஏற்கனவே பல குடும்பங்கள் யாழ்ப்பாணத்திலிருந்து தீவுப் பகுதிக்கு திரும்பிச்சென்றுள்ளன.

சகல காரியாலயங்களும் அங்கு இயங்குவதால் படிப்படியாக யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள தீவுப்பகுதி மக்கள் தினமும் திரும்பிச்செல்வதைக் காணக்கூடியதாக உள்ளது. (152)

## இராசி பலன்

17 - 07 - 1991

புதன்கிழமை

ஷஷ்டி பி. ப. 2-40 வரை, உத்தரம் மு. ப. 10-27வரை, இராகுகாலம் பகல் 12-00 முதல் 1-30 வரை, சுபநேரம் மாலை 4-30 முதல் 6-00வரை, குமாரஷஷ்டி விரதம்.

மேடம்; அயலவர் நேசம், வருவாய் அதிகரிப்பு, களிப்பு.

இடபம்: கடின வாக்கு, தந்தையர் பகை, அலைச்சல்.

மிதுனம்: மனைவியால் துன்பம்,வீண்வாதம்,மனவேதனை.

கடகம்: வீட்டில்சுபகாரியம், வெற்றிக்களிப்பு, புகழ்.

சிங்கம்: பகைவர் தொல்லை, தொழில் பாதிப்பு, கடன்.

கன்னி: அசமந்தப்போக்கு, அற்பர் நேசம், குடும்பச்சுகம்.

துலாம்: காரிய விக்கினம், துயரச்செய்தி, தொழில் நஷ்டம்.

விருச்சிகம்: அதிஸ்ட வாய்ப்பு, அதிகாரிகள் உதவி, நண்பர் உதவி.

தனுசு: தொழில் முயற்சி, கடன் வரவு, வெற்றி, காரிய சித்தி.

மகரம்: குளப்பமடைதல், குடும்ப ஒற்றுமையின்மை, தனிமையடைதல்

கும்பம்: தவறான போக்கு, கருத்து மோதல், உடல் பாதிப்பு.

மீனம்: புத்திரர் மகிழ்ச்சி, கல்வியால் பெருமை,சகோதர பகை.

-ஜோஸ்யர்

## மாணவர் உணவுமுத்திரை

[மானிப்பாய்]

காரைநகர் பாடசாலைமாணவர்களுக்கு ஏப்பிரல், மே மாதத்திற்குரியமாணவர்மதிய உணவு முத்திரைகள் வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை மானிப்பாய் பகுதி பாடசாலை மாணவர்களுக்கு இவ்உணவு முத்திரைகள்வழங்கப்பட்டும் இதற்குரிய பொருள்கள் இப்பகுதி ப.நோ. கூ. சங்கங்களுக்கு வந்துசேரவில்லையென்று தெரிவிக்கப்படுகிறது; [71]

## மக்கள் அஞ்சலி

[மானிப்பாய்]

ஆனையிறவுஇராணுவமுகாம் தாக்குதலில் வீரமரணம் அடைந்த போராளிகளுக்கு நவாலி, ஆனைக்கோட்டைப் பகுதிகளில் வாழை,தோரணங்கள் கட்டப்பட்டு மக்களால் அஞ்சலி செலுத்தப்படுகின்றது.

மேலும் இப்பகுதியிலுள்ள கடைகள் வர்த்தக நிலையங்கள் பொது ஸ்தாபனங்கள் ஆகியவற்றிலும் கறுப்புக்கொடிகள், மஞ்சள் சிவப்பு கலந்த கொடிகள் என்பனவும் அஞ்சலிக்காக கட்டப்பட்டுள்ளன. [71]

## சைவ சமய பரீட்சை: விண்ணப்ப திகதியை நீடிக்க கோரிக்கை

(வட்டுக்கோட்டை)

யாழ். சைவபரிபாலன சபையினரால் அகில இலங்கை ரீதியில் நடாத்தப்படும் சைவ சமய பாடப்பரீட்சைக்கான விண்ணப்பமுடிவு திகதியை நீடிக்குமாறு யாழ். மாவட்டத்திலுள்ள அதிபர்கள் பலர் பரீட்சைச் செயலாளர் சைவப் புலவர் திரு. வ. கந்தசாமிக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்,

ஊரடங்குச் சட்டம் காரணமாக பாடசாலைகள் நடைபெருமையால் விண்ணப்பங்கள் தயாரிப்பதிலும் மாணவரிடம் கையொப்பம் பெறுவதிலும் சிரமம்ஏற்பட்டிருப்பதனுலேயே விண்ணப்பமுடிவு திகதியை நீடிக்குமாறு அதிபர்கள் கேட்டுள்ளனர். (139)

## பற்சிகிச்சை

[கொழும்புத்துறை]

மீசாலை விக்கினேஸ்வர மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற பாடசாலை மாணவர்கள் பற் சுகாதாரம் சம்பந்தமாக கடந்த செவ்வாய்க்கிழமைகாலை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி பற்சுகாதார உதவியாளர்கள் 559 மாணவர்களைப் பரிசோதித்தார்கள். [154]

## தேர்த் திருவிழா

[பருத்தித்துறை]

அருள்மிகு புற்றளை சித்தி விநாயகர் ஆலய தேர்த்திருவிழா இம்மாதம் 25-ம் திகதி நடைபெறுகின்றது. 26ம் திகதி தீர்த்தத் திருவிழாவும் மறுநாள் 27-ம் திகதி பூங்காவனத் திருவிழாவும் நடைபெறுமென ஆலய தர்மகர்த்தாசபை அறிவித்துள்ளது. [52]

## 38 யுவதிகளுக்கு தையல் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

கடந்த ஆறுமாத காலமாக நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச்சங்க 23வது இலக்க கிளை, 38யுவதிகளுக்கு தையல்பயிற்சியினை அளித்து வந்தது.

ஆறுமாதகால பயிற்சியின் பின்னர் தயாரிக்கப்பட்ட ஆடைகள் பொருட்காட்சிக்கு வைக்கப்பட்டன.

பொருட்காட்சியும் விற்பனையும் சனி - ஞாயிற்றுக்கிழமைகளில் கொக்குவில் வளர்மதி முன்னேற்றக்கழகத்தில் இடம் பெற்றது.

பயிற்சிபெற்ற பெண்களுக்கு நற்சான்றிதழ்கள் வழங்கப்பட்டு பயிற்சிக்கு துணிவகைகளும் இலவசமாக நல்லூர் பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்தினரால் வழங்கப்பட்டது. (56)

## தாகசாந்தி விழா

[மானிப்பாய்]

ஆனைக்கோட்டை மூத்தநயினார் ஆலயத்தில் கடந்த 13-ம் திகதி தாகசாந்தி விழா நடைபெற்றது

இப்பகுதி அனைத்து தாகசாந்தி நிலையங்களின் சார்பாக ஆனைக்கோட்டை இளைஞர்களால் நடாத்தப்பட்ட இவ் வைபவத்தில் வில்லிசை, மெல்லிசை, மங்கள இசை போன்ற பல கலை நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. [71]

# "வருமான எல்லையை விதிக்காது சகலருக்கும் இலவச உணவு விநியோகிக்கப்பட வேண்டும்"

## யாழ். அரச அதிபரிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வருமான எல்லையை விதிக்காது சகலருக்கும் இலவச உலர் உணவு விநியோகிக்க வேண்டுமென வலிவடக்கு புனர் வாழ்வுக்கழகம் யாழ். அரச அதிபரிடம் மகஜர் மூலம் கேட்டுள்ளது,

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: "இராணுவ ஆக்கிரமிப்பு பிரதேசத்திலிருந்து இடம் பெயர்ந்த விவசாயிகள், கடற்றொழிலாளர்கள், சீவல்தொழிலாளர்கள், கட்டிட தொழிலாளர்கள் மற்றும் ஏனைய சுயதொழில் செய்தவர்கள் தொழில் வருமானம் எதுவுமின்றி அல்லல்படுகின்றனர். இவர்கள் ஏதாவது வருமானம் பெறக்கூடிய வகையில் தொழில் செய்ய உதவி செய்யப்படவேண்டும்.

இவர்கள் ஏதும் வருமானம் பெறும்வழி ஏற்படும்வரைக்கும் வாராந்த இலவச உலர் உணவு தொடர்ந்து வழங்கப்பட வேண்டும். [153)

## குவைத்தில் தொழில் இழந்த 73,000 இலங்கையருக்கு மீண்டும் வேலை வழங்க முயற்சி

(கொழும்பு)

வளைகுடாப்போரினால் குவைத்திலிருந்து தாயகம் திரும்பிய 73,000 இலங்கையர்களுக்கு மீண்டும்வேலைவாய்ப்பு வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வேலையிழந்த இலங்கையர்களுக்கு வேலை வழங்குவதற்கு 25,420 வெற்றிடங்களுக்கு குவைத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மீண்டும் வேலைவாய்ப்பு பெற்று குவைத் செல்லும் இலங்கையர்களுக்கு 400 குவைத் டினார் சம்பளம், இலவச விமான டிக்கெட் உட்பட பல சலுகைகள் வழங்கப்படவுள்ளன.

இதேவேளை குவைத்தில் வேலையிழந்த இலங்கையர்களுக்கு நஷ்டஈடு பெற்றுக் கொடுக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## படையினர் தாக்குதலினால் அங்கவீனமடைந்துள்ள ஜே.வி.பி. சந்தேகநபர்கள்

(லண்டன்)

சிறிலங்கா படையினரின் தாக்குதல்களினால் பல ஜே.வி.பி சந்தேகநபர்கள் கண்கள் குருடாக்கப்பட்டும், அங்கவீனமடைந்துமுள்ளனர் என்று பி.பி.ஸி கொழும்பு செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தாவது;

தாங்கள் பிடிபட்டதற்கான காரணம் எதுவும் தெரியாது. பல இளைஞர்கள் தடுப்பு முகாம்களில் 2 வருடங்களாக இருப்பவரை நான் நேரில் சந்தித்தேன்.

கொழும்பு பி.பி.ஸி. செய்தியாளர் கிறிஸ்மொறிஸ் கடந்த வாரம் ஜே.வி.பி. சந்தேகநபர்கள் என்ற பெயரில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பல சிங்கள இளைஞர்களை நேரில் சென்று சந்தித்தார்

சில இளைஞர்கள், இலங்கை அரசு அவசரகாலச் சட்டத்தின் கீழ் காலவரையின்றித் தங்களைத் தடுத்துவைத்திருப்பதாகவும், அடிப்படை வசதிகள் அற்றும், சட்டத்தரணிகளை சந்திக்கவோ, உறவினர்களைக் கணமுயாமல் உள்ளதாகவும் கூறினார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார். [பூ]

### உலர் உணவு வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு யுத்தத்தைத் தொடர்ந்து கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலிருந்து யாழ் மாவட்டத்திற்கு இடம் பெயர்ந்துவந்துள்ள மக்களுக்கு ஒரு வாரத்திற்கு இலவச உலர் உணவு வழங்கப்படவுள்ளது

இதற்கான உத்தரவை யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் தமது பிரதேசத்திலுள்ள உதவி அரசாங்க அதிபர்களுக்கு பிறப்பித்துள்ளார். (155)

### சமுகம் தரவும்

(யாழ்ப்பாணம்)

யாழ். தொழில் நுட்பக் கல்லூரி (பகல்நேர, மாலைநேர) அனைத்து மாணவர்களும் நாளை 18-ம் திகதி வியாழக்கிழமை காலை 9-30 மணிக்கு தவறாது கல்லூரிக்கு சமுகம் தருமாறு மாணவர் அமைப்பினரால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

### ஆனையிறவு

[1-ம் பக்கத் தொடர்ச்சி)

படையினரால் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இரண்டு பிரிவுகளைக் கொண்ட சுமார் 3,000 அதிரடிப்படைப்பிரிவினர், ஆகாய, கடல், தரைப் பிரிவினரும் சேர்ந்து இத்தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றனர், (பூ)

### தமிழக அரசு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இதுவரையும் இருபத்தையாயிரத்திற்கும் குறைவானவர்களே தம்மைப் பதிவு செய்துள்ளனர்.

தமிழகத்திலுள்ள இலங்கைத் தமிழர்களில் இன்னும் எழுபத்தைந்து வீதமானவர்கள் பதிவு செய்ய வேண்டியுள்ள போதிலும் பலர் தம்மைப் பதிவு செய்வதில் அக்கறை காட்டவில்லை என்னு அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

குறிப்பிட்ட திகதிக்குள் இந்த அகதிகள் பதிவு பூர்த்தி செய்யப்படாவிட்டால் இலங்கை அகதிகள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர்கள் நாடுகடத்தப்படுவர் என்றும் தமிழக அரசு எச்சரிக்கை செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

### போக்குவரத்து

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பிரயாணம் செய்து இடையூறு செய்ய வேண்டாமென அவ் வேண்டுகோளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மணலாறு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

புலிகள் தரப்பில் 12 போராளிகள் வீரமரணமடைந்தனர்.

நேற்று முன்தினம் காலை இப்பகுதியிலுள்ள புலிகளின் முகாம் ஒன்றை முற்றுகையிட வந்த சிறிலங்கா இராணுவத்தின் மீது புலிகள் கடுந்தாக்குதலை நடத்தினார்கள்.

நேற்று முன்தினம் சுமார் ஒன்றரைமணி நேரம் இடம் பெற்ற மோதலில் 10 இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் ரி 56 ரக துப்பாக்கி ஒன்றும் புலிகளால் கைப்பற்றப்பட்டது.

நேற்று நடைபெற்ற மோதலில் 4 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

இம்மோதலில் வீரமரணமடைந்த புலிகள் விபரம் வருமாறு: கப்டன் மனோ [கோ. சிறீதரன் திருமலை], கப்டன் பகிலன் [ச. விமலநாதன் முல்லைத்தீவு], லெப். குஞ்சன் [இ. சந்திரகுமார் திருமலை) குசேலன் [டே. சுரேஷ் மட்டுநகர்], 2-ம் லெப். ரகுநாத் [தி. பிரகாஸ் வல்வெட்டித்துறை) 2-ம் லெப் இராசேந்திரம் முத்துயோகராசா [யாழ்ப்பாணம்] றிங்ஸ் (ம. திமாவளவன் திருமலை) 2-ம் லெப். பாபு [அ. மனோகரன் மட்டுநகர்) லெப். ஞானி [த. சிவநாதன் திருமலை) ஜெயசீலன் [பு. அரியவிக்னராசா மட்டுநகர்] லெஸ்ரன் [அ. தவக்குமார் மானிப்பாய்) பிரியன் [சதீஸ்வரன் செபமாலை திருமலை]

வீரமரணமடைந்த வீர வேங்கைகளுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

### மாணவர்கள் இரத்ததானம்

(யாழ்ப்பாணம்)

காயமடைந்த போராளிகளுக்கு இரத்ததானம் வழங்குவதில் பாடசாலைமாணவர்கள் முண்டியடித்துக்கொண்டு ஈடுபட்டு வருகின்றனர்.

யாழ். கனகரத்தினம் மகாவித்தியாலயம், யாழ். இந்துக் கல்லூரி, யாழ். பரியோவான் கல்லூரி, யாழ். புனித சம்பத்தரிசியார் கல்லூரி, யாழ். திருக்குடும்ப கன்னியர்மடம் மகாவித்தியாலயம், யாழ். புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி ஆகிய பாடசாலை மாணவர்களே இரத்தானம் வழங்குவதில் முன்னணி வகிக்கின்றனர். (க]

### ஊரடங்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த 7-ம் திகதி பருத்தித்துறைக்கு உணவுப்பொருள்களுடன் வந்த வில்லி லில்லி கப்பலும், கடந்த 9-ம் திகதி பருத்தித்துறைக்கு உணவுப் பொருள்களுடன் வந்த மேர்குஸ் குமாரி என்ற கப்பலுமே திருகோணமலைக்குச் சென்றுள்ளன.

கடந்த 10-ம் திகதி முதல் அமுலுக்கு வந்த ஊரடங்குச் சட்டத்தை அடுத்து சிறிதளவு பொருள்களை இறக்கிய குறைவுடன், உணவுப்பொருள்களை இறக்காமலே காங்கேசன் துறைத் துறைமுகத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது. (153)

### தென்மராட்சி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.

நுணுவில் சந்தி, சாவகச்சேரி, கச்சாய், மிருசுவில், மீசாலை, கெற்பலி, விடத்தற்பளை, உசன் ஆகிய இடங்களில் இச்ஷெல்கள் விழுந்து வெடித்தன.

இச்ஷெல் தாக்குதலினால் கே. செல்லாச்சி [80 வயது உசன்) உட்பட இருவர் காயமடைந்தனர்.

நேற்று முன்தினம் நள்ளிரவு 12-30 மணியளவில் ஆரம்பகான இத்தாக்குதலின் போது இருபத்தியிரண்டுஷெல்கள் ஏவப்பட்டன.

சபாபதி கனகேஸ்வரன், எஸ் சின்னையா, மு. ஆனந்தமணி, செ. கனகலிங்கம், எஸ். சண்முகராசா ஆகியோரின் வீடுகள் இத்தாக்குதலினால் சேதமடைந்தன. (155-56)

### கிரனேட்வீச்சு

(புலோலி)

நெல்லியடிப் பகுதிச் சுற்றுடலில் நேற்றுப்பிற்பகல் 5-30 மணியளவில் வடமராட்சி கிழக்கிலிருந்து பலாலி நோக்கிச் சென்றுகொண்டிருந்த ஹெலி இரு இடங்களில் கிரனேட்டுகளை வீசிச் சென்றது.

இதனால் ஏற்பட்ட சேத விபரங்கள் இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை கிடைக்கவில்லை. (61)

### ஹெலியிலிருந்து

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கட்டைகாடு வெற்றிலைக் கேணிப்பகுதிகளில் தாக்குதல்களை நடத்திய ஹெலிகொப்டர் பலாலி திரும்புகையில் மணல்காடு பகுதியில் கிரனேட் வீச்சை நடத்தியது.

காயமடைந்தோர் விபரம் வருமாறு:-

ஜே. இளைக்கரசி (10 வயது), இ. கலாபன் (8 வயது], ஜெ. டேவிட் (10 வயது), ஜெ. ராஜன் (10 வயது), ஜெ. கௌசிகா (10 வயது), ஜெ. யூஜினி (5 வயது), ஜே. கொன்சிலேற் (39 வயது), யே. புவிராஜ் (8 வயது) ஞா. கிறிஸ்ரிராசன் (5 வயது) ஞா. கிறேசன்சியா (33 வயது), ரி. ஞானப்பிரகாசம் (37 வயது), ஆர். கமலநாதன் (10 வயது), டேவிட் கிறிஸ்ரி (4 வயது,) (61)

### இரவில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதலினால் மக்கள் பீதியுடன் வாழ்கின்றனர்.

பலத்தசத்தத்துடன் விழுந்து வெடிக்கும் ஷெல்களால் வீடுகள் மற்றும் கட்டிடங்கள் அதிர்கின்றன அதனால் வீடுகளுக்குள் இருக்கவும் இப்பகுதி மக்கள் அஞ்சுகின்றனர். (155)

### வடமராட்சி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கேணிப்பகுதியைச் சேர்ந்த இவர்கள் விமானத்தாக்குதல் ஏற்பட்ட கட்டிட இடிபாடுகளுக்குள் அகப்பட்டனரா அல்லது யுத்தப்பகுதிக்குள் சிக்குண்டனரா எனத் தெரியவில்லை.

இதேவேளை ஆழியவளைக் கடல் பகுதியில் கட்டுமரத்தில் சடலம் ஒன்று மிதப்பதாகவும் இவர் வெற்றிலைகேணியிலிருந்து மீன் பிடிக்கச் சென்று காணாமல் போனவரா இருக்கலாம் எனவும் சந்தேசிக்கப்படுகிறது. [61)

### நாற்பது

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கள் தெரிவித்தன.

இதேவேளை கட்டைக்காடு பகுதியில் இடம்பெற்ற மோதலில் 16 படையினர் பலியானதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. (பூ)

### போராட்டத்தில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது;-

"யாழ் கோட்டை ராணுவ முகாம், மாங்குளம் ராணுவ முகாம் இவைகளைவிட ஆனையிறவு முகாம் விஸ்தீரணத்தாலும் படைபலத்தாலும் மிகப்பெரியது. அத்துடன் சுற்றுடல் சாதகமற்றதுமாகும்.

இவ்வாறான சூழலிலும் படையினர் பலரை பலிகொண்டும், காயப்பட்டோரை மீட்கவிடாமலும், உணவு நீர் விநியோகத்தை தடுத்தும் ஹெலி இறங்கவிடாமல் தடுத்தும், பல காவல் அரண்களை வீழ்த்தியும் வெற்றிவாகைசூடி நிற்கிறோம். இதுவிடுதலைப்புலிகளின் தீரத்தையே காட்டுகிறது.

ஆனையிறவு முகாம் விடுதலைப் புலிகளின் கையில் விழும் தறுவாயில், மற்றொரு துறையில், கட்டைக்காட்டில் பல ஆயிரம் படையினர் இறக்கப்பட்டுள்ளனர்.

### ஆனையிறவு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தரையிறங்கிய இடத்திலேயே நிற்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்று இடம்பெற்ற மோதல்களில் படையினர் தரப்பில் பலர் கொல்லப்பட்டதாகவும் தெரியவருகிறது.

நேற்று முன்தினம் படகுகளில் வெற்றிலைக்கேணியில் தரையிறங்கிய படையினர்மீது தொடர்ந்து புலிகள் தாக்குதல் நடத்திவருவது குறிப்பிடத்தக்கது (56-61-ரி)

### காப்பரண்கள்

1-ம் பக்கத் தொடர்ச்சி)

எனவே செயற்கை காப்பரண்கள் அமைப்பதற்கு மண்மூடைகள் பெருமளவிலும் விரைவாகவும் தேவைப்படுகின்றது.

மண்மூடை தயாரிப்பதற்குரிய சாக்கு, உரப்பை, சாக்கு ஊசி, சணல். மண்வெட்டிகள் என்பனவற்றை தமிழீழ மக்கள் உடனடியாக தந்துதவும்படி விடுதலைப்புலிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தரையிறக்கப்பட்ட இராணுவத்தினருக்கும் ஆனையிறவு முகாமுக்குமிடையிலுள்ள தூரம் 5 மைல் மட்டுமே இராணுவத்தினரின் முன்னேறும் முயற்சியை தடுத்து நிறுத்த விடுதலைப் புலிகள் ஒவ்வொரு நாளும் தமது உயிரைத் தியாகம் செய்து சளைக்காமல் போராடிவருகிறார்கள். (க]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ப் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஜூலை 17ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Number B/180386/81